20 820

உ
சிவமயம்.

# திருவானைக்காப்
# பதிற்றுப்பத்தந்தாதி.

திருச்சி
டிஸ்ட்ரிக்ட் எடிகேஷனல் ஆபீஸர்
**K. V.** சுப்பையர், M. A., L. T.,
அவர்களியற்றியது.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,
புத்தக வர்த்தகர்,
மதுரை & சென்னை.

*Rights Reserved* 1932. *Price As.* 0-2-0

0-,12MSU,T
N32
67799

உ

சிவமயம்.

# திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி

திருச்சி டிஸ்ட்ரிக்ட் எடிகேஷனல் ஆபீஸர்

K. V. சுப்பையர் M. A., L. T.,

அவர்களியற்றியது.

மூன்றாம் பதிப்பு.

இ. மா. கோபாலகிருஷ்ணக் கோன்,

மதுரை & சென்னை.

பதிவு செய்தது] 1932. [விலை அணா 2.

# முகவுரை

‘வானைக்காவல் வெண்மதி மல்குபுல்கு வார்சடைத்
தேனைக்காவல் இன்மொழித் தேவிபாக மாயினன்
ஆனைக்காவல் அண்ணலை அபயமாக வாழ்பவர்
ஏனைக்காவல் வேண்டுவோர்க் கேதுமேத மில்லையே ,


சில ஆண்டுகளுக்கு முன் நான் சென்னை தொண்டை மண்டலம் ஹைஸ்கூல் பிரின்சிபாலாகப் பணியாற்றிவந்த காலத்தில் ஹைஸ்கூல் நிர்வாக அங்கத்தினர்களில் ஒருவரும், சென்னைச் சர்வகலாசாலைப் பரிட்சகர்களில் ஒருவரும், மிகுந்த சமயப் பற்றுடையவருமான தண்டலம் பாலசுந்தரமுதலியாரவர்கள் சமய சம்பந்தமான ஓர் நூலை இயற்றித்தரவேண்டுமென்று என்னைக் கேட்டுக் கொண்டார்கள். அவர்களுடையவேண்டுகோளைமுன்னிட்டும், தோன்றாத்துணையாயிருந்து அவ்வப்பொழுது துணை செய்து வரும் பேரருளை வியந்தும், ஆனைக்காவற் பதியில் மங்கையுடன் வீற்றிருக்கும் மாதேவன் மீது அந்தாதியாக இத்துதிநூல் இயற்றப்பெற்றது. இதற்குமுன் அச்சியற்றிய பிரதிகள் செலவழிந்தமையாலும், சிவபக்தியிலீடுபட்ட அனேகர் இதை மீண்டும் வெளியிடவேண்டுமென வற்புறுத்தியதனாலும் மூன்றாம் பதிப்பாக இது வெளியிடப் பெற்றிருக்கிறது.

திரிசிரபுரம்
25—10—32

K. V. சுப்பையர்.

# பிழைதிருத்தம்.

| பக்கம். | வரி. | பிழை | திருத்தம். |
| --- | --- | --- | --- |
| 1 | 13 | எழுதிலுண்ட | எளிதிலுண்ட |
| 2 | 11 | சிறமேற் | சிரமேற் |
| 5 | 15 | பொருவலோயே | பொருவிலோயே |
| 17 | 24 | பாழ்ந்த | பாழ்த்த |
| ,, | ,, | மிகுந்த | தகுமிந் |
| 25 | 14 | நடேச | நநேச |



K. V. SUBBAIYAR, M. A., L. T., M.R.A.S. (London.)

# சாற்றுக்கவிகள்.

## வித்வான் - காஞ்சீபுரம் - இராமசாமி நாயுடு

அவர்களியற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

திருவளருமைம்பூதத் தொருபூதத் தலத்திலுறை சிவ பிரான்றன், மருவளருஞ் செங்கமல மலர்புரையுந் திருவடிக் கண் மாட்சிமேய, குருவளரும் பதிற்றுப்பத் தந்தாதிச் சொன்மாலை குலவச்சூட்டி, உருவளரும் புடவிமிசை யுயர் சீர்த்தி யுற்றுநனி யொளிர்வுற்றானே. (க)

அன்னவன்யா ரெனிற்றொண்டை மண்டலத்துத் துளுவவே ளாளர்பேரான், மன்னலுறும் போதகசாலை யிற்பிரின்சி பாலெனுமுத் யோகம் வாய்ந்தோன், தன்னனைய நயசுகுணன் றமிழ்க்கடலை யெழுதிலுண்ட தளரா நாவோர், முன்னவனென் றேயுலகி லேவருமேத் தெடுக்க மிகு முதுசீ ருள்ளோன். (உ)

சிவனடியார்க் காணிலந்தச் சிவனென்றே கருதியவர்ச் சிறக்கப் பூசித், தவனமையின் னாப்பிறவி யறுக்கமுயல் வோனென்று மாசு தீர்ந்த, புவனமதி விரவலர்க்கோர் புகலிடமா யிருப்பவன்மெய்ப் போத முற்றோன், தவநயக் கூத்தூர்வாழும் வேங்கடரா மையர்தரு தநயனென்போன்

ஆங்கிலபா ஷையிலுமுய ரற்புதமா நற்கவிஞ ராவரென்று, வாங்குதிரைக் கடலுலக ருரைத்திடுஞ்சான் சன்மில்டன் வருஷேக்ஸ் பீயர், ஓங்குபுகழ்க் கோல்டிஸ்மித் தென வெவரு முரைக்குமுரை யுற்றோன் சால்பு, தேங்குறு சீர்ச் சுப்பையனெனு நாமம்பூண் டென்றுந் திகழ்வோன்மாதோ

---

சேந்தோம் காலேஜ் தமிழ்ப்பண்டிதர்,

## திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்களியற்றியது.

விண்ணோங்கு மணிமாட நிரையோங்குங் கூத்தூரின் மேவியோங்கும், பண்ணோங்கு மறையோங்கு நாவோங்குஞ்சிறப்புடைய பனவனாவோன், கண்ணோங்கு மணியனையான் சுப்பைய நாவலவன் காவையோங்கும், பெண்ணோங்கும் பங்கனுக்குப் பதிற்றுப்பத் தந்தாதி பேசினானால்.

அஷ்டாவதானம்,

### பூவை - கலியாணசுந்தரமுதலியாரவர்கள்.

கற்றுப்பத் தந்தாதி வருநீனோர் தனமதரங் கன்னங் கண்கள், பெற்றுப்பத்தந்தாதியிமிர்நல்லார்நடநாளும்பெ யருங் கா வை, யுற்றுப்பத் தந்தாதிக் குயரலங் காரசுவை யோங்க மீவார்ப, திற்றுப்பத் தந்தாதி கூத்தூர்சுப் பையக் கவிஞன் றெரித்திட் டானல்.

புரசை - அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்,
மாணுக்கரும் சென்னைச் சர்வகலாசாலைச்
சங்கத்துப் பரிட்சகர்களி லொருவருமாகிய,

### தண்டலம் - பாலசுந்தரமுதலியாரவர்கள்.

மும்மறையு ணடுமறையி னந்தமறைக் குயிரெனவே மொழியா நிற்கும், எம்மையுடை யானமலை பங்குடையா னினிதுவீற் றிருக்குஞ் சோணுட், டம்மையுமிம் மையுமுத வும் பலதளிக டமிலழகார் காவைக்கன்னேன், செம்மை மலி யந்தாதியின்மையினந் தாதியொன்று செப்பினுனல்.

இனையனியா ரெனினறைதுஞ் சகோதரவாஞ் சையு மன்புமென்று மேய்ந்தோன், புனை தருசீ ராங்கிலத்திற் சது ரனெனக் கூறுமெழிற் புலமை மிக்கோன், தனைநிகராந் தொண்டைமண் டலகலா சாலைக்குத் தலைமை மன்னும், வினையமுறுநயப்போதகாசிரியன்சுப்பையமேதக்கோனே

அவனுரைத்த வந்தாதி கேட்டவழிச் செவியினுக்கு மடைவிளைதைச், சிவையினிக்கு நினைப்போர்கண் மனமி னிக்குமென்பராற் சில்லோரீண்டு, சுவையொன்பானுெடு பத்திச் சுவைசொட்டும் பான்மையினுற் றெடுநீர் வைப் யில், உவமையிலா வமுதென்கோ தேனெடுபாலென்கோ யா துரைப்ப லம்மா! (ரு)

சிவஞ்சத்திதனைப்பிரியா தொருசத்தி சிவம்பிரியாதெ ன்றுசெப்பும், தவஞ்செறியுமான்ருேர்சொற்கியையவிறை யுமையுருவந் தானே கொண்டும், நவம்பொருந்து மிறையு ருவமுமைகொண்டும் வீற்றிருக்கு நலமே மேவும், பவந்த ணக்குங் காவைமகிழ் பரம்பொருளே யிவற்காக்கும் பரி வின் மாதோ. (சு)

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சிறப்புப்பாயிரம்.

இஃது

மஹா வித்வான் - புரசை

அஷ்டாவதானம் - சபாபதிமுதலியாரவர்கள்

மாணாக்கருளொருவரும்

சென்னை. தொண்டைமண்டலம் ஹைஸ்கூல்

தமிழ்த் தலைமைப் பண்டிதருமாகிய

திருமழிசை

வீரசிம்மாசனமடம்

ஸ்ரீலஸ்ரீ - சாந்தலிங்கசுவாமிகளாதீனம்

வித்வான் - சிவப்பிரகாசையரவர்கள்

இயற்றியது.

அறுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

சொல்லேறு திருத்தொண்டத் தொகையேறு மெய்யடியர் தொகுப்பி னற்பா, னில்லேறு மும்மையின ரினிதேறு மேன்மையுறீஇ யிருநீர்ப் பொன்னிப், பல்லேறு காலேறிப் பாய்ந்தேறுங் கமலமலர்ப் பணைகு லாவிச், செல்லேறு பொழிற்புவிமான் சிரமேறு மகுடமெனத் திகழ்சோ ணாட்டுள். (க)

மறைமுழக்கு மறையவரம் மறைநவின்மா மனுநெறிசெய் மகமு ழக்குந், தறைமுழக்குந் திகழவியூண் டருமுழக்கும் பெறுமுழக்குந் தருக்கி னுண்ணு, முறைமுழக்கும் வானவர்கண் மணமலர்தூ யாசிபுரி முழக்கு மோவா, நறைமுழக்கும் வயற்றிருவா னைக்காவின் மேவுமரனற்ருட் கன்பின். (உ)

வானோங்கு தருவினங்கள் வளனோங்கு மஞ்சிறையவண்டர் மாந்தத், தானோங்கு நறைவழங்காத் தகையோங்கு நவையொருவித் தம்போலென் றுந், தேனோங்கு வகைதேற்றுந் திறத்தோங்கல் போனிவந்து தேறல் வாக்கும். கானோங்கு வயற்றஞ்சைக் கடுத்தோங்குங் கூத்தூரிற் கவினுற் றோங்கும். (ந)

மன்னுமறை யவருளசுர் மறைமுறையோன் வாதரா யணப்பேர் மேய, தன்னிகர்கோத் திரனுபத் தம்பசூத் திரத்தொழுகுந் தகைமைபூண்டோன், பன்னுசிவசித்தாந் தப்பற்றுறுமகாலிங்கப் பனவனீன்ற, கன்னனிகர் வேங் கடராமைப்பனெழிற் றவச்சுதனேங் கணவே ளன்னான். (ச)

தோளுறிடினற் புகழோடு தோன்றுகெனச் சொற்ற தமிழ்ச் சுருதிக் கேற்ப, வான்றவட கலையொடுதென் கலை மட்டோ பலர்புகழு மாங்கிலத்து, மேன்றசம்பூ ரணனெ னுஞ்சொற் கியைந்தபொருள் வாய்ந்திலகும் எம்-ஏ பட் டஞ், சான்றதிற லரசாங்கத் தவர் நல்கப் பெற்றிலகுந் தனிச்சீ ருற்றோன். (ரு)

சங்கியற்றண் பணைச்சென்னைத் தொண்டைமண் டல கலாசாலை தன்னிற், றங்குமுதன் மைப்போத காசிரியத் தகைமருவிச் சற்சங் கங்க, ளெங்கெங்கும் பிரசங்க மினி தாற்றி யெவரெவரு மின்பிற் பொற்பூ, விங்குமணமுறில தனை யேய்க்குமிவன் சீரெனவே யிசைப்ப நின்றோன். (சா)

புண்ணியநன் னீறக்க மணிவடமைந் தெழுத்திவையே பொருளாக் கொண்டோன், திண்ணியலுஞ் சிவசரணர் தமைச்சிவமாய் மதித்தொழுகுந் திறத்தின் மிக்கோன், மண்ணியலும் புகழ்க்காந்தி மதிச்சரிதந் தமிழ்மொழியின் வரைந்த மாண்பன், தண்ணியநன் மாணவர்க டனைநிகர்ப் பப் போதிக்குஞ் சக்தியுற்றோன். (எ)

பன்னருமிப் புகழ்பரவு சுப்பைய நாவலனிப் பாரின் மேவி, மன்னுதமிழ்ப் புலவர்மன மகிழ்ந்துசிரந் துளக்கி யிறுமாந்து நிற்பப், பொன்னகரப் புலவர்பெறு தேமாப்ப விருசுவையும் பொலிவி னோங்கத், துன்னரும்பத் தழகு நவ ரசமுமலங் காரமுமே துதைந்து மல்க. (அ)

தலமலிதண் டமிழ்விருத்த யாப்பதனுற் பல்வேறு சந்தமேய, நலமலியும் பதிற்றுப்பத் தந்தாதி யொன்றி யற்றி நன்க ணிந்தே, வலமலியிவ் வுடற்கொடுறு பெரும் பேறு நனிவாய்ந்து வண்க டற்சூழ், புலமலிய வச்சியற் றிப் பற்பலர்க்கு முதவிமிகு புகழுற் றானல். (கூ)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி.

---

## விநாயகர்துதி.

### நேரிசைவெண்பா.

நந்தார் வயற்றிருவா னைக்காப் பதிற்றுப்பத்
தந்தாதி சொல்ல வருளும்பாற்—சிந்தார்
பணபதிமா லீசனயன் பண்டேத்து மாதிக்
கணபதிமா தண்டைக் கழல்.

---

## சமயாசாரியஸ்தவம்.

---

### எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

வடமொழியிற் றென்மொழியே வலிமைத் தாய
வகைகாட்ட மறைக்காட்டம் மறையான் மூடுந்
தடமணிக்கோ புரக்கதவத் தாடி றப்பச்
சாத்தப்பைந் தமிழ்ப்பதிகஞ் சாற்றி னார்நீட்
படமணிபாப் பணிப்பரமன் றோழ னன்பிற்
பரவுமொரு புலியுநெடும் பாம்பு மேத்தத்
திடமணி யம்பலநடத்தன் கரத்தாற் றீட்டைந் (வாம்.
திணைக்கோவை சொற்றவன்றாள் சிறமேற் கொள்

---

உ

## இயற்றமிழ்ப்
## போதகாசிரியர் வணக்கம்.

---

### அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

---

திருவமலி பொழில்சுலவுந் திரிசிரபு ரத்தினிலெண்
டிசையோர் போற்றும்
பொருவரிய சர்வகலா சங்கத்திற் றமிழ்த்தலைமைப்
புலமை வாய்ந்தோன்
மறுவெளியேற் கொண்டமிழி லக்கியவி லக்கணத்தின்
மாண்பு தேற்றும்
பருவமுகி லனையமுத்துச் சிதம்பரநா வலன்புகழைப்
பரவு வாமால்.

---

## நூல்.

### அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

---

கார்கொண்ட கட்டற்பருகுங் கடமுநிகைக் கமண்டலத்திற்
கவினுற் றூர்ந்த
நீர்கொண்ட வொருநதியே யிருநதியா வகந்தழுவ
நிலவா னைக்காப்
பேர்கொண்ட பெருநகரி லகிலாண்ட வல்லிதொழப்
பெரிது மேவுஞ்
சீர்கொண்ட வரன்சரணைச் சிந்திப்போர் வினையனைத்துஞ்
சிந்திப் போமால் (க)

சிந்திக்க வரமருளுந் திருவானைக் காவடிக
டினமு நெஞ்சே
வந்திக்க மலர்க்கரமும் வாழ்த்தபசுந் தமிழ்வாக்கும்
வணங்க மெய்யும்
பந்திக்கத் தலையன்பும் பரிந்தளித்து மவன்மலர்த்தாட்
பரவா தந்தோ
நிந்திக்க வுடற்குழைக்கு நின்செய்கை விழற்கிறைத்த
நீர தன்றே. (உ)

நீரோங்கு மடவரலை நிதஞ்சுமப்போ னெனலறத்தன்
னிலைமைநீளப்
பாரோங்கு மழுதேசப் பதியினிலங் நீருருவாய்ப்
பயிலுங் கொன்றைத்
தாரோங்கு நெடுஞ்சடிலத் தற்பரனின் பொற்பமர்செந்
தாட்டு ணைக்கே
சீரோங்கு திருத்தொண்டின் றிறனோங்க வருள்கவினை
தீர்தற் கின்றே. (௩)

தீர்த்தவடி வுற்றிலகுந் தீர்த்தனே செவ்விய நூற்
சிலம்பி முன்ன
ரார்த்தசெழு மணிக்கோயி லமுதேசப் பெருமானே
யடியா ருள்ளச்
சீர்த்தவிசின் மேவியருள் சிற்பரனே யுனைப்பரவுஞ்
சிறிய னேனைப்
போர்த்தமல மிரித்தமலப் புனைகமலப் பதநிழலிற்
புகுவிப் பாயே (ச)

ஆயமறை யந்தமளந் தளந்தறியா வமலதிரு
வானைக் காவின்
மேயநினைப் பரவிபமுஞ் சிலந்தியுமா மிவற்றென்று
மேலா நற்பே
றேயமற்றென் றிச்சகவாழ் வெய்தவரு ளியதென்சொ
லெவ்வு யிர்க்குந்
தாயனையா யுள்ளன்பி லாவெளியே னுணர்ந்துவினை
தணக்கு மாறே (ரு)

தணக்கருமைங் கணைக்கிழவன் றனைச்சினவும் விகடவிழித்
தழற்கொ டென்றன்
கணக்கறுவெம் மலவிருட்கட் டறச்சினவி நின்சரண
கமல நீழன்
மணக்குறுமா றருள்புரிக கோச்செங்க ணன்முன்னர்
வணங்கிப் போற்ற
வெணற்கருநின் பதமுத்தி யீந்தொளிர்வெண் ணவனிழ
லிருக்குந் தேவே. (சா)

தேவர்மணி முடியிடறுன் றிருவடிப்பேற் றினைவிழையிச்
சிறியே னென்று

மூவர்திரு நெறித்தமிழும் முழுமணிவா சகன்முறையு
முறையிற் றேரே
னுவலிற்கண் மணிநீறு மணியகிலே னைந்தெழுத்தி
னடைவுந் தேரே
னுவலடி யமர்ந்தருளு நாயகனே யெங்ஙனதை
நண்ணு கேனே. (எ)

நண்ணருமிப் பிறவிவிடி னணுகுவதெப் பிறவிகொலோ
நாயி னேற்கென்
றெண்ணிநின தருட்கிடனும் வகையுஞற்று திளமானி
னெழினோக் கன்ன
கண்ணியர்த மிடையகரங் கவின்றிலகுங் கல்வியினிற்
களிப்புற் றேற்கும்
புண்ணியர்க டொழுமுனடிப் போதருள்க பிரமேசப்
பொருவ லோயே. (அ)

பொருதுறுமோர்முநிவனுகர்ந்துமிழ்தரப்பற்பலரென்பிற்
புரள்வான் யாற்றி
னொருமுநிகைக்கமண்டலநின்றெழீஇயரன்பூசனைக்குதவி
யுயரும் பொன்னி
மருவுதிரு வானைக்கா வாணவனைக் கோதமன்போன்
மயலுற் றேத்தா
திருவினையை யிரித்துனரு ளீகவென விறைஞ்சுமெனக்
கிரங்க னன்றே. (கூ)

நன்றுமய னிருமிக்கக் கண்டகியுட் படிந்தாழ்ந்து
நற்பொன் னிக்க
ணின்றெழுவி மானத்து நின்மலனே யயன்மாலு
நேடிக் காணு

வுன்றன்மரை மலரடிப்பே றுள்ளன்பி லாவெளியே
னுறுமா றெங்ங
னென்றணவும் பொழில்சுலவு மெழிலிலகு ஞானதலத்
திருக்குங் கோவே. (கய)

## எழுசீர்க் கழிநெடி லாசிரிய விருத்தம்.

இருக்காதி வேத முடிமீது மன்ப
ரிதயால யத்து மூலவா
பெருக்காவை மேவு முநிமேனி வந்த
பெருநாவ லத்து மிளிரா
திருக்காலெ ணாது சிரமே லிலங்கு
திறனுனி லத்து றுவனே
லொருக்காலு மாலு மயனுரு மென்று
முனும்வாழ் வுறப்பெ றுவனே. (கக)

பெறவேவி ரும்பு வரமென்று நின்றுட்
பெரும்புண்ட ரீக மிதயத்
துறவேவி ளைந்து நிதமுன் றனிச்சீ
ருவந்தன்பி னோடு சிரமேன்
மறவாதி ரண்டு கரமோலி கொண்டு
வணங்காவெ ணாது வினைவே
றறவேய ருள்க சிறையாரும் வண்ட
ரமரும் வெணுவன் மணியே (கஉ)

மணியாய் மணிக்கு ளொளியாய் மலர்க்குண்
மணமா யுரைக்கு ளுரையாய்
குணியாய் குணிக்க வரிதா குநித்த
கொலையார் மழுப்ப டையினேய்

பணிகூ டுமெத்த வொருகா வைமுத்த
பதிஞா னமெற்க ருளுவாய்
அணியார் விடைக்கொ டியனே மறைக்கு
மரியாய் தவத்த ரமுதே (கங)

தவஞான மீகை யருளோ டடக்கந்
தயை சாந்த மேது மிலனைய்
யவமேகு லாவு மகமே தருக்கி
யடியே னுயாத ழிவனே
சிவமேவி சாக சனகா மதர்த்த
சிறியேனை யாண்ட ருள்வையே
பவமேவி ராய நெடுமால் பழிச்சு
பவனே வெணுவ லமுதே. (கச)

அமுதேச ஞான தலவாச தும்பி
யகிலாண்ட வல்லி யயன்மால்
குமுதேசன் பானு முநிகோத மன்வண்
குறுமாத வத்தன் முதலாஞ்
சமுதாய மான தவரால் வணங்கு
தலைவாமி குத்த வவரன்
பிமியேனு மின்றி யிறுமாந் திருக்கு
மெளியேனு முய்ய வருளே. (கரு)

அருளேது மின்றி யன்பேது மின்றி
யறமேது மின்றி யறிவின்
தெருளேது மின்றி செந்தாளி றைஞ்சு
திறமேது மின்றி மகளிர்
மருளேது வன்றி மனமே கவன்று
வள்ர்வேனு முன்ற னுயரன்

பருளை யடைந்து னடியே வணங்க
வருள்வாய் வெணுவ னிலையே (கசு)

நிலையாத வாழ்வு நிலையாக நாடி
நிதமே யலைந்து திரிவேன்
கலைமாறு சீத மதிசூடி நீடு
கவினார் குடந்தை யரனே
யலையாரு ஞால மிசையேழை யேனு
மருணாடு கின்ற துளதோ
தொலையாத சீர்மை மலிகாவை மேவு
சுடரே வெணுவ லரசே. (கஎ)

அரைசேர் தரக்கி னதளும் புழைக்கை
யதளும் பணங்கொ ளரவுந்
திரைசேர் கடற்க ரளமும் வழுத்திச்
செறியுங் கொடுக்க னலதும்
பரைசே ருடற்கண் பயின்மற் றெனைத்தும்
பணுபுண் ணியங்க ளிதென
விரைசே ரறற்றண் டலவிங்கி சைக்கின்
விழைவே னவைக்கெ ளியனே. (கஅ)

எளியேனி னாது திருமேனி பூப்ப
வெழுநீறு மக்க மணியு
மொளியேவி ராய புவிமீதி லேற்றிங்
குலவாவு டற்பி ணியையுங்
களியேற னாதிப் பவநோயு மோச்சுங்
கடைப்பாடு முன்னி ஞானத்
தளியேவி ளங்கு பவவாண் டருள்க
சரணத் தடுத்த வெனையே. (ககூ)

எனக்கும்மெ னக்கு ளிறையா முனக்கு
மிடையாம் வினைக்கு முளவாம்
பனைக்குந்தி னைக்கு முளவாய பேதப்
பகுப்போர்கி லாக்க யவனேன்
றனக்கிங்க னைத்துந் தெரித்தே மணத்த
சரணீவ தென்று புகலாய்
வனக்குங்கு மத்தண் டடமார்பி னுண்முன்
வருகாவை மேவு பொழிவே. (உ0)

எழுசீர்க்கழிநெடிலாசிரியவிருத்தம்.

வேறு.

பொழிசுவைக் கனியே பூசனை புரிந்த
புழைக்கைகமும் மதப்பொருப் பினுக்கே
கழிபெருங் கமலக் கழலிணை யருளிக்
ககனவான் முகட்டினைக் களுலுஞ்
செழிதரு சினைவெண் ணாவலின் மூலச்
செல்வமே சிறியனே னுளுற்றும்
பழிதபுத் தருள்க பலவெனக் கிளைத்துப்
பரவுமா மறைமுதற் பொருளே. (உக)

பொருளுடை யவர்க்கப் பொருளினை யுதவல்
புண்ணிய மன்றென லோர்ந்துந்
தெருளுடை யவர்க்கே திருவருட் புரிதல்
சிறப்பதோ திருவெணீ றளித்தீண்
டருளுற வமைத்த வணியெயிற் காவை
யகிலநா யகிதொழுந் தேவே
மருளுறு மடியேற் குனதருள் வழங்கன்
மாண்பதோ மதித்துத வுகவே. (உஉ)

உதவுவா ருதவும் பொருளினில் வெறுப்பு
முன்கழல் பழிச்சுனர் கமலப்
பதயுக ளத்திற் படுந்துக ளதனிற்
பயிறரு விருப்புமீண் டெளியேற்
குதவுறி லஃதென் றனக்குமா லறியா
வுன்பத மளிக்குமான் மணிசெய்
கதவுறு கோயிற் காவையம் பரம
கருத்தநின் கருத்தறி கிலனே. (உ௩)

அறிவரு மறையே யம்மறைப் பொருளே
யாகமாந் தத்துறுந் தெளிவே
மறிமழு வேந்து மருவளர் மரைக்கை
வள்ளலே மதுகர மார்க்கப்
பறிதரு கொன்றை மலர்மலர் சடிலப்
பண்ணவ நண்ணருங் காவைச்
செறிவுறு மிறையே நின்னடிக் கடிமை
செயவருள் செய்வதெப் பொழுதே. (உ௪)

தேவரு மறியாச் சிவபரஞ் சுடரே
சிருட்டியா தியமுறை பயின்ற
மூவரு மறியா முதல்வனே மூவர்
மொழிதமிழ்ச் சுவையுணர் முடிவே
சேவரு முனது திருவருட் படிவச்
சேவையைக் காவையுட் கண்டேன்
றூவறு மெளியே னுளத்தனை யல்லாற்
சகத்திய லேதுங்காண் கிலனே. (உ௫)

காண்டொறு முள்ளக் களிதுளும் பெளியேன்
கருத்தறிந் துதவுறின் மறிப்பா

ீண்டெவ ரிளஞ்சேய்க் கறிக்கவாய்ச் சென்ற
ளவருணை மறித்தவ ரெந்தாய்
சேண்டவழ் சோலைக் காவையங் கோயிற்
றெய்வமா னத்தொளிர் விளக்கே
வேண்டுதல் வேண்டா மையிலா யதனல்
விழைந்தவை விழைந்தவா றருளே. (உகூ)

அருந்தமி ழாரூர்க் கவிஞனோ டளவி
லடியவர்க் கிரந்திடு சோற்று
விருந்தினை யுகவேன் பூந்தராய் வாழ்க
விஞன்மண நாளள விலர்க்குத்
தருந்திரு மணத்துச் சோற்றினை விழையித்
தமியனேற் கருள்செய லென்றோ
கருந்தட நெடுங்கட் கௌரிமு னேத்துங்
காவைவாழ் தருபெருந் தகையே. (உஎ)

தகைப்பரு மாபா தகஞ்செய்தண் டீசன்
றனைநிக ரன்பில னேனு
மிகைப்புரி யவன்றன் றந்தைபோல் வன்பின்
மிகுதரு மறிவிலேன் றனக்குந்
திகைப்பற நோக்கித் திருவருள் புரிதல்
செவ்விதே யாமுவந் தருள்க
பகைப்புல னறுத்த முனிவர்சூழ் காவைப்
பதியமர்ந் திலகுமா பதியே. (உஅ)

பதித்தக முன்றுள் பரவுனர்க் கருளும்
பரமனென் றருமறை பலவும்
விதிப்பவுங் காட்டாய் வேடுவர் கோமான்
விளங்கவும் விரிதிரைப் பொன்னி

நதிப்பெரும் புனல்சூழ் நாவலி னடிக்க
　　ணண்ணியொண் ணதிமுடி மிலைந்த
பதிப்பொரு ளெனுநின் பதமலர்க் கன்பு
　　படைத்தில னுய்வதெப் படியே. (௨௯)

படியளந் தவனும் பங்கயத் தயனும்
　　பரமியா மென்றுளத் தருக்கி
னடிமுடி யறியா தகழ்ந்துயர்ந் தெய்ப்ப
　　வழலுரு வாயவெப் பறவோ
துடியிடை மடவா டுதிப்பநீ ருருவாய்த்
　　துன்னிய தறிகிலேன் காவைக்
கடியவிழ் கடுக்கைத் தாமவென் மனத்தீக்
　　கட்டறுத் தாண்டரு ளுவந்தே. (௩0)

## கலிவிருத்தம்.

வந்த னங்கள் வளரு மரைமலர்க்
கந்த மல்குங் கயஞ்செறி காவையுள்
வந்தி றைஞ்சிமுன் வாரணம் பெற்றபே
றெந்த நாளெளி யேற்கெய்து மீசனே. (௩௧)

ஈச னேசுர ரேத்தெழிற் காவையுள்
வாச னேமறை வாழ்த்திப் பரவுறாஉந்
தேச னேநின் றிருப்பதஞ் சிந்திக்கும்
நேச னேற்கருள் வாய்சிவ நிட்டையே. (௩௨)

நிட்டை யுற்ற நிலைச்சித்த னாகிநீ
றிட்ட மைத்த வெயிலெழிற் காவுளா
யட்ட சித்திமு னுற்றிய துண்மையே
விட்ட சித்தி யெனக்கரு ளெந்தையே. (௩௩)

எந்தை நின்கழற் கும்மினி தேத்துறாஉ
மந்த மேவு மகிலாண்ட வல்லிக்குஞ்
சந்த மாலை தமிழினிற் சாற்றுநற்
சிந்தை தந்து தினந்தொழச் செய்கவே. (ஙச)

வைய மூர்தர வாழ்வதி லென்பய
னைய னேகயா ரண்ணியத் தண்ணலே
மெய்ய னேயுன் விரைமலர்த் தாடொழச்
செய்ய வேகட னிச்சிறி யேனையே. (ஙரு)

சிறிய னேன்பிழை சித்தத் தடக்கியைம்
பொறிய வித்துனைப் போற்றுநர் நாடுநன்
னெறிய ளித்தெனை நித்தமுங் காத்தரு
ணறிய பூம்பொழின் ஞான தலத்தனே. (ஙசா)

தலங்க ளூந்திற் சலத்தல நாதனே
சிலந்தி முன்னருச் சிக்கமன் னுக்கிய
நலங்கண் டுன்னரு ணண்ணப் பரவுமென்
மலங்க ளைந்தெனை வாழ்விக்க வேண்டுமே. (ஙஎ)

வேண்டு நின்னடித் தொண்டும் விழைகுநர்க்
கீண்டொன் றில்லென் றிடாவகை யீதலு
மீண்டி வண்பிற வாமெய்ப் பதவியுங்
காண்ட குஞ்சீர்க் கயாரணி யத்தனே. (ஙஅ)

அத்த நின்கழற் கன்புடை யாரெலாம்
பத்தி யோடுனைப் பாடலு ணர்ந்திழி
பித்த னேனும் பிதற்றுரை கேட்டரு
ணத்து லாம்வய னுவற் பதியனே. (ஙகா)

பதிய தாகினைப் பாடவு நான்மறை
மதியி லாமன் மறந்தவெற் கிங்கருள்
வதியு மாலயன் மற்றுள தேவருங்
கதிபெ றப்பணி காவையுள் வாசனே. (ச0)

அறுசீர்க்கழி நெடி லாசிரிய விருத்தம்.

வாசந் தருகற் பகவாசன்
மருவும் பிரமச் சாயையற
நேசம் பெறவற் பொடுமூழ்கு
நிரைவண் டலர்நற் றடமூழ்கிப்
பாசந் தெறவுற் றியல்வேனுன்
பதவொண் கமலத் தார்வேனே
தேசம் பரவத் திகழ்காவைச்
செழுமா நகரத் தமர்வானே. (சக)

வானு ரனல்கான் மண்ணீரான்
மாமதி யென்று மெண்வகையு
மானு யலரா னன்னீரி
னுடியை யம்பான் றொடுமெம்பின்
மானுர் மயலா னெந்தாழ்வேன்
மாலதி ரிந்துன் வரியளியார்
தேனுர் மலர்மாண் செந்தாளிற்
சேர்தர லென்றமு தப்பரனே. (சஉ)

பரனே பரமார்த் தம்வினவும்
பதியே நிதியே படர்கங்கா
தரனே வியனுர் விண்டருவின்
றகைதேர் பொழிலார் தருகாவை

யரனே யலர்பா தம்விழையு
மவர்தா மறியாரோ முன்சந்
திரனே படியா வம்புனலின்
செழுநீர்த் திவலைப் பெருமையையே. (௪௩)

மையார் கண்டத் திறையோனே
மலையான் மணக்கு மணவாளா
வையா வுன்ற னருளுறுதற்
கறமேன் றவமே னருச்சனையே
னெய்யா திங்கக் கதிரவன்மு
னெணியே முழுகாத் தடமுழுகி
மொய்யார் பொழிற்கா வைமருவும்
முதல்வா வெனிலோ பெறலாமே. (௪௪)

பெறுதற் கரிய பெரும்பேறும்
பெறுவார் பிறவித் தளையறுவார்
தெறுபற் பலது யரமாறிச்
சிவமாம் பெருமைச் செறிதருவார்
தறுகட் களிறு துதிஞான
தலனார் சரணஞ் சரணமெனக்
குறுநற் படிவத் தொருமுநிமூழ்
குறுநீர் முழுகி யாடுநரே. (௪௫)

ஆடிற் காவை யயோத்தியர்கோ
னறலாற் கொலைபா தகமறுவீர்
நாடிவெ ளைரா வதமிவர்வீர்
நான்முக னாகி யனமிவர்வீர்
தேடிக் கலுழன் மீதூர்வீர்
தீயவு லுத்தர் மீதுகவி
பாடிப் பாடி யுழல்வீரெம்
பரனா ரருளும் பெறுவீரே. (௪௬)

67799

O-,12M8V,T
N32

ஈர்ந்தண் புனலான் ஞானதலத்
திலகுஞ் சம்புப் புனன்மூழ்கிற்
சேர்ந்தண் மிகுபா தகமேகுஞ்
சிவமார் முத்தி நிலைகூடுங்
கூர்ந்தீ தறியாக் கொள்கையெனே
கோதா வரிசிந் தலைகங்கை
யார்ந்த யமுனை யென்றுனியாங்
கலைந்தே யுழலு மவரவரே. (சஎ)

அவனே டவளங் கதுவாகி
யமைந்த மாயாப் பிரபஞ்ச
மெவையு நீயே யாயிலக
வெளியேன் புறம்பிங் காவேனே
நவமார் காவைப் பெருமானே
நல்கா யெளியேற் கெழுநாவான்
கவலா நிலைநீக் கியநீரோர்
காலுற் றிடும் பெருவரமே. (சஅ)

ஒருவா தனைமா றுதரத்தி
லுற்றுப் பவமார் பிறவியற
வருளா லெளியே னேர்சூழ
லறிந்தே னஃதீந் தருள்செய்வாய்
மருவார் பணிகோச் செங்கண்ணன்
வணங்கு ஞான தலத்தாருந்
தெருளா ருமையா டியசீமத்
தீர்த்தத் தன்பான் மூழ்குதலே. (சகூ)

குதலைப் பயிலோர் மதலைமுனுட்
கொளும்பாற் கடலும் வெண்டிரைவீ

சுதலைப் பெறுவா னதிமுதலேழ்
　　தூநதி யுங்கவுண் மதமார்தும்
பிதலைய தன்பிற் பணிகாவைப்
　　பிறங்கோன் பான்றீர்த் தமுநல்கு
முதலைப் பலன்யா வையுமொருவர்
　　மூழ்கத் தருஞ்சிவ கங்கையதே. (ருo)

அறுசீர்க்கழிநெடி லாசிரியவிருத்தம்.

கங்கைவெண் மதிநற் றும்பை கடுக்கையுஞ் சிரத்தி லங்கச்
செங்கையொண் டழன்மான் சூலந் திகடம ருகமுந்தங்கப்
பங்குறு முமையா ளோடும் பரிந்திட பத்தி லூர்ந்தே
யிங்குவந் தருளக்காவை யீசனை வணங்காய்நெஞ்சே. (ருக)

நெஞ்சகத் தன்பி லார்நூ னெறிமுறை யாற்றும் பூசை
நஞ்சென வெறுத்து ளன்பி னற்கலாற் புடைக்கும் பூசை
யெஞ்சலின் மகிழ்விற் கொள்ளு மீசனே காவை மேவுஞ்
செஞ்சடைப்பெருமநல்குன் றிருவடி வணங்குமாறே (ருஉ)

மாறனுக் கருளுஞ் செம்பொன் மலைப்பொருள் விரும்பகில்லே
னேறெனப் புவியை யாண்டீண் டிருந்திட விரும்பகில்லேன்
வீறணி சுவர்க்கத் தார்தம் விழைநலம் விரும்பே னின்றூட்
சோறதேவிழைவேனல்கசுடர்மதிற்காவைவாழ்வே. (ருங)

வாழ்த்துனர் வாழ்த்தயானே வசைமிகப் புரிவனேனுந்
தாழ்த்துனைப் பித்த னென்னுஞ் சாற்றுமத் தகைமை தேர்
சூழ்த்தறு காற்புள் ளூதுஞ் சோலையங் காவை நாத [வேன்
பாழ்ந்தவென் பிறப்ப றுத்துன் பதந்தரத் மிகுந்தநாளே. (ரு)

நாளும் வெண் ணீறுபூசி நயனநன் மணியும் பூண்டு
நீளுகல் லாடை போர்த்து நினதடி யவரி னஞ்சாக்

கோளுறு வஞ்ச வேடங்கொண்டிழி தொழிற்செய்வேனுன்
றாளுறவென்றோ ஞானத் தலனுறை தருமெம் மானே. ருரு

மானன விழியார் மையல் வலைப்படிந் தவர டித்தொண்
டானவை புரிவே னுன்ற னடியர்தொண் டியற்ற கில்லே
னீனமா ரெளியே னின்றுன் னிணையடி நினைவுற் றேவா
மோனமார்ந் திருக்கை யென்றோ மொழியமு தேசத்தேவே ()

தேவர்தம் வாழ்க்கை முற்றுந் திரும்பவும் பிறவிக்கேதென்
றாவயி னவைவெ றுத்து னலரடி விழைந்து நின்றேன்
பாவணி பவரைச் சோதிப் பவனலை யென்றிங்கோர்ந்தே
யாவலி னனைந்தேன் காவையமுதநின் குறிப்பிங்கென்னே.(கஎ)

குறிப்பறிந் தருளா யேனுங் குறையிரந் தரமு ழக்கந்
திறப்படப் புரியு மெற்குன் றிருவருள் சுரவா தென்னே
விறப்பவு மிரப்பார்க் கில்லை யென்பவ ரீன ரென்னு
முறைப்பொரு ளுணர்ந்த காவை முயங்கருட் படிவக்கோவே. ()

கோடியாம் வெறுக்கை நேடிக் கோதையர் மக்க ளின்ப
நீடின ரெனினு நின்று ணிலையறிந் தேத்தா ரன்றே
நாடியற் சினைய நாவ லுதவொண் ணிதிய முற்றும்
வீடின ராகி மேலை விரிநர காட்சி பூண்டோர். (ருகூ)

பூண்பல பூண்டு மெய்யிற் பொற்படாம் போர்த்து நாளுங்
காண்பல மாதர் மெச்சக் காளையாய்த் திரிவே னல்லாற்
சேண்பயி லுவன் மூலச் சிவபரஞ் சுடரே நின்றாண்
மாண்பொடு பணிந்துன் கோயில் வலம்வர முயல்கிலேனே. (கூ0)

எண்சீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

முயன்றன்பிற் பரவடியார்க் கெளிய னென்று
முழங்குமறை யுண்மையமர் நீதி யாரன்

பியன்றிடுதட் டேறநின்கீட் கோவ ணத்தட்
டெளிமையிற்று முறலோர்ந்துன் றாட்க ணன்பு
குயின்றனனின் குறிப்பறியேன் குறிக்கொ ணாவெண்
குணக்குன்றே ஞானதலக் கோவே யென்பாற்
பயின்றுளவைம் பாசமறுத் தருட்க டைக்கண்
பார்த்தருணின் பதம்பெறவிப் பாரின் மீதே. (சூக)

பாராதி யண்டபகி ரண்ட முற்றும்
பரந்தனைத்துந் தானாய பரனே மெய்ம்மைச்
சீராரு மணிமயவி மானத் தோங்குஞ்
சிற்பரனே சேதியர்கோ னன்பிங் கோர்ந்தும்
போராரும் வஞ்சகன்கைப் படவிட் டாற்போல்
போற்றுமெனைக் கைவிடா தெனைப்ப கைக்கு
நேராரைத் தவிர்த்தெளியேற் கருள்க நின்று
ணிழன்மருவிச் சிவானந்த நீடு மாறே. (சூஉ)

ஆறேறு மணிமுடிகொ ளரனே நாவ
லடியமரும் பெருமானே யடர்க்கும் வீரப்
பாறேறு மேறேறும் பரனே கொன்றைப்
பைந்தருநின் னுருக்காட்டப் பரவா னயன்
வீறேறு மன்பினில்யா னெருகூ றெய்த
விழைந்தருளி லென் பாற்கூற் றுவன்மே வானாற்
பேறேறு மொருசிறுவன் பான்முன் போந்து
பெற்றவுதைத் தழும்புடலிற் பிறங்க லானே. (சூங)

பிறங்குமுளத் தன்பினொடும் பரவி நின்றாட்
பேறுபெறு மதமாவாய்ப் பிறக்கி லேன்மஞ்
சுறங்குசிகைக் குன்றெனவந் தெதிர்த்த வஞ்ச
வும்பலெனப் பிறக்கினுநின் னுருக்க ணார்வன்

கறங்குதிரைக் கடலகட்டிவ் விருவ கைத்தாங்
காரியக்கு மிடமிலனு யுழல்வே னென்றுன்
றிறங்குலவு மலரடிக்காட் படுவ தெந்தாய்
தென்காவைப் பதியமருந் தேவ தேவே. (௬௪)

தேவர்கோ னுளுற்று கொடுஞ் செடித புத்தா
டிருவருட்பாங் கறிந்தனடிக் கடிமை பூண்டும்
பூவருபங் கயன்கரத்தும் பங்க யன்றன்
புதல்வன்றன் கரத்துமினிப் புகிலிப் பூவி
லேவருக்கும் பெருநகைப்பிற் கிடமன் றேவவ்
வெண்மையெவர் பாற்றெனநன் கெண்ணி யேனுஞ்
சேவருநின் றுள்பெறுமா றருள்வாய் காவைச்
செழுநகரி னமர்ந்திலகுஞ் சிவபி ரானே. (௬௫)

சிவமயமிவ் வகிலசரா சரம தென்னுத்
தேரேனம் புலநெறிச்செல் லகம டக்குந்
தவமுமிலேன் குருமுதன்முப் பொருளோர் கில்லேன்
றுன துவாந் தன்மையொரு சிறிது மோரேன்
உவர்மேனி யீரங்கொல் லியனைக் கண்டன்
றுன்னடிய னெனப்பரவு மடிச்சே ரேன்பக்
குவமுமிலே னருட்பெறுமா றென்னே காவைக்
குருமணிமா னத்தமருங் குணப்பொற் குன்றே. (௬௬)

குன்றெடுத்தோண் ணிரைபுரந்தோன் விழிபெ யர்த்துன்
கோகனகத் தாட்கணியக் குலவு மாழி
யன்றுதவு வண்மையைக்கண் டின்ற டுத்தேற்
கன்பினருட் செயாதெனகி லாண்ட வல்லி
யொன்றினளோர் பான்மற்றோர் பான்மா னின்று
னுன்றனக்கே திடமென்பா லில்லை யென்னி

லென்றெனக்காப் பொய்ம்மொழியேன் சராச ரங்க
ளெல்லாநின் வயினொடுங்கு மியல்கண் டேனே. (சுஎ)

கண்டெழிற்காஞ் சியிலன்பும் பொருளு நேர்ந்து
காடவர்தங் கோமானு நின்றை யூரி
லெண்டகுபா வனையொன்றாற் பூச லாரு
மெடுத்தசிவா லயங்கடமி னினைத்தா பிக்கக்
கொண்டசுப நாளொன்றாக் கூடப் பின்னுட்
கொள்கெனக்கா டவர்க்குநவில் குறிப்பிங் கோரிற்
றிண்டிறல்சே ரந்நெறிகொண் டுய்வேன் காவைச்
சிலந்திநூற் றளியவது தேர்கி லேனே. (சுஅ)

தேர்ந்தகய வாயால வாய வாய்முன்
சென்றுமித்திஞ் சயமருளாற் சித்திக் கப்பெற்
றூர்ந்தவலி யான்பெயரு நின்றாட் பேறு
மங்குறவு மையறிவோ டொன்றை யோருங்
கூர்ந்தபகுத் தறிவுமுறு மொருபே ரியாக்கை
கொண்டுமுனைப் பரவகிலாக் கொடியே னின்றாட்
சார்ந்துசுகா தீதநிலை மருவ லெங்ஙன்
றவஞான தலத்தமுதே சாற்று வாயே. (சுகூ)

சாற்றும லொருநால்வர்க் கன்று லின்கீழ்ச்
சாற்றியகைக் காட்டறியேன் றமிழ்வே தத்தி
னூற்றாரு மெழினால்வ ரிரண்டற் றென்று
யுற்றிலகு மத்துவித முத்தி தேரே
னேற்றார்நின் சந்தான மரபுற் றோங்கு
மெழிற்குரவ ரார்ந்தநல மீதென் றோரேன்
கூற்றார்ந்த வுமைபரவக் காவை மேவுங்
குரைகழற்று ணிழலெவணங் கூடுவேனே. (எ௦)

## எழுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

கூட கன்ற புள்ளை னுக்கு லாவு மெய்யி னுயிர்நிலை
நாட கன்ற வொள்ள றிவி னயி னேனு மளிமுர
லேட கன்ற வண்க ழற்க ணேயு மாறென் காவிரி
யூட கன்ற நற்ற ளிக்க ணோங்கி வாழு மீசனே. (௭௧)

ஈச னேசு ரேச னேத்து மிறைவ னேவெண் ணாவல்வாழ்
நேச னேநற் றிரிப தார்த்த நிலையி தாமென் றோர்கிலாப்
பாச னேனைம் பாச மும்ப ரித்தி யாக மாய்விசு
வாச நேசம் வாய்ந்து னைவ ணங்கு மாறு செய்கவே.(௭௨)

செயற்க ருஞ்செ யற்ப ரிந்து செய்வ ராற்பெ ரியரென்
னியற்ப ரூஉக்கை மாவு ரித்தெ டுத்த வாற்ற றேற்றவுங்
கயற்க ணார்ம யற்ப டிந்தொர் காலு நின்க ழற்றொழே
னுயற்கெ னக்கொர் வகைபணிக்க வுற்றகாவை யத்தனே.

அத்த விப்பி றப்பில் யானி னடிகள் காணு மருளிலே
னொத்த வேத நாவன் மன்னி லுயர்வெ ணாவன் முயலகன்
பைத்த மேனி பரவை வாயிற் படியெ னப்பி றக்கிலெள்
ளத்த னையு முயல்கி லாது னடியி ணைக்கண் டுய்வனே.(௭௪)

உய்ய வுண்ட நஞ்ச யின்று ணார்ந்த நின்ன ருட்டிறம்
பொய்யி கந்த நிற்றொ ழாது போகு மூழ்ப்பு ணார்ப்பினான்
மெய்ய கன்று மாண்டு மாண்டு மீண்டி வண்பி றக்கு றாஉம்
வெய்ய வான வர்ப்ப ராவும் வீணரென்கொல்பெறுவரே (௭௫)

பெற்ற மாய மாயன் முன்பி றங்க லாய்ப்பி றங்குநாள்
சற்று நோக்கு ருவ டிக்கண் டன்க ணிட்ட வாறுபற்
றற்ற வர்க்க ருள்வன் காவை யண்ண லென்று ணர்த்தவும்
மற்றொர் பற்றினேனும்வாழ்த்தும்வாழ்த்திலென்பயப்பதே

பற்றி லார்க்க ருள்வ னுவற் பதிய னென்னு மறைமொழி
வெற்றெ னுவுணர்ந்த னன்வி ளங்கு நாவ லூரனுக்
கொற்ற னுயு வந்து தூது ரைத்தி யைத்த வுண்மையா
விற்றை நாளு னேவ லாக வெனையி யக்கிற் சாலுமே. (௭௭)

சால நீள்வ யற்சு லாவு சம்பு கேச வெங்கணும்
பாலி னீரின் விரவி நின்னின் பரிசு காண்கை யொன்றுமற்
றாலி சூழ்பு விக்க ணென்னை யான றிந்தி ருத்தலொன்
றேலி ரண்டி லொன்றை யானு மெய்த விங்ஙன ருள்கவே (௭௮)

அரும றைக்கு லஞ்சொல் காவை யாத்த தூல சூக்குமங்
கருவி யென்னு மும்மை யாக்கை யிற்ப டிந்தும் படிவிலா
தொருவில் கால மூன்றி னின்று முரைய கக்கு ருதவென்
னுருவை யானு முணரு மாறிங் குனத ருட்புரிகவே.(௭௯)

புரியு நின்ன டித்தொ ழும்பு பூண்ட வென்முன் வெற்புநே
ரெரிவி ழிக்க ரும்ப கட்டி னியமன் வந்தெ திர்ந்தநா [ன்
ளரிவி டைக்க ணூர்ந்த வண்வந் தருள்சு ரத்தல் வேண்டினே
விரிம லர்ப்பொ தும்பர் மேய வெள்ளை நாவல் வள்ளலே.()

## கலிவிருத்தம்.

வள்ளமலர் வாவிமத வாரண வனத்தோ
ரெள்ளிடையு ளன்பினடி யேத்தினர்க ளன்றே
விள்ளருமெய்ஞ் ஞானநிலை மேவியய னூர்கைப்
புள்ளியையி கந்துசிவ போகநுகர் வாரே. (௮௧)

ஆரமல ராரனணி யார்மனைவி யாரஞ்
சோரவலை நித்திலது தன்னுநின் முடிக்க
ணூரலெவன் காவைநக ரார்ந்தவுன டிக்கீழ்ச்
சாரவரு ணல்குகத யாவினெளி யற்கே (௮௨)

எட்டுணைய வேனுமிர வாவகையு மேற்பார்க்
கிட்டுநுகர் தேட்டமுமி லங்கடியர் தொண்டு
முட்டுதையு மன்பினொடு முன்புகழ்ந வில்சொற்
கட்டுமிக நல்குகக யாரணிய வாழ்வே. (அங)

வாரணவ னத்தவிர்வ னத்துருவ வெந்தா
யாரணமெ னைத்துமகி லாண்டமும்விராய
பூரணனெ னுஞ்சொலுறு போதமது ணர்ந்துங்
காரணமெ னேவுலகர் கண்டுபர வற்கே. (அச)

பரசமய மேவுமவர் பாரிலளி மூசும்
சுரசமய நாவனிழ றுன்னுபுவு லாதைக்
கரசமய நல்குமமு தேசனரு ளோரில்
வரசமய சைவதவ வாழ்வையிக வாரே. (அரு)

இகமிலகு தீயவுட லீரவெனி னெஞ்ச
மிகமறுகு முன்னருறு மேல்வினையி னந்தோ
வகமய லகன்றுனடி யார்ந்தருண் மெய்ஞ்ஞானச்
சுகமருவு மாறருள்க தோயவுரு வோனே. (அசு)

உருவமொரு நான்கருவ நான்குபய மொன்றாய்
மருவுநவ மார்வடிவ மன்னியும னாதும்
பொருவில்பொரு ளாய்நிறைபு னற்படிவ நாத
குருவடிவ மேவியொரு கூற்றருள்வ தென்றே. (அஎ)

என்றுபணிந் தேத்துமமு தேசபடர் கோட்டுக்
குன்றுறழ்ப கட்டினிவர் கூற்றனெனை மேவி
லன்றுவிடை யேறியெனை யாளுமுமை யாளோ
டொன்றுற வெதிர்ந்தருள்க வுள்ளுமெளி யற்கே. ()

உள்ளியிடு கந்தமென வோதுமய லோவா
தெள்ளிருவி னைக்குளுழல் வீரிலகு செங்கட்
கிள்ளியிடு மாலயகி லாலயநின் வெண்ணீ
றள்ளியிட வவ்வினைய கன்றொளிர்கு வீரே. (அகூ)

ஒள்ளொளியே னுவெளிய னுள்ளமலர் மேய
வெள்ளியந னுவலடி மேவமுத வள்ளால்
தெள்ளுசிவ ஞானநிலை தேறவிழை வேனுக்
குள்ளநெறி யுள்ளபடி யுள்ளுற வுணர்த்தே. (கூo)

எழுசீர்கழிநெடி லாசிரிய விருத்தம்.

உறுபெரு நாரமோடு பிறைநீடு கொன்றை
யொளிரிண்டை மோலி சரணம்
மறுவறு வேதமோல மொடுநாடு கஞ்ச
மலராந டேச சரணம்
இறுதிகொண் மாலயன்றன் சிரமாலை கொண்ட
வெழிலாரு மார்ப சரணம்
நறுமலர் நாவனீழ லமுதேச மால்க
ணனிமல்கு பாத சரணம். (கூக)

சரவச ரங்களாய பிரபஞ்ச முற்றுந்
தானு மனாதி சரணம்.
கரவச மேயசம்பு முநிநல்கு நாவல்
கனியுண்ட வண்ட சரணம்
பரவச நார்த்தநன்மா பழிநீக்கு காவை
பரநாத தத்வ சரணம்
உரவச னத்தகோத மன்விரக தாப
மொழிவித்த நம்ப சரணம். (கூஉ)

நம்பகி லாண்ட வல்லி கொளமுன் னவிற்று
ஞானோப தேச சரணம்
கம்பலை நீடுகங்கை யினுங்கா விரிக்குக்
கனநல்கு நாத சரணம்
பம்பெழு சாகரங்க டிசைநான்கு மல்கி
பரவப் புலிங்க சரணம்
வம்பவிழ் மேருவாவி நதியாகு மாறு
வரநல்கு வள்ளல் சரணம். (கூங)

அப்பிறை பாரியாடோ ளணைவன்னி சாப
மகல்வித்த தேவ சரணம்
ஒப்பறு நேரியானில் லவள் சூடுமார
மொளிருத்த மாங்க சரணம்
செப்புச ரோருகன்றீ வினைநீக்கி யாக்குந்
திறநல்கு மூர்த்தி சரணம்
மைப்புரு கூதனேத்த வடர்பிரம பாவ
மாற்றும்ப ரும்ப சரணம் (கூச)

உம்பல்செய் பூசையேற்றன் றுவந்தாண்டு கொண்ட
வுயர்ஞான தேச சரணம்
பைம்புன னீடியோடு பொருணைக்கண் முத்தம்
பாலித்த வீச சரணம்
அம்புயை யாடரங்க நெடுமால் வணங்க
வருள் கருணை வாரி சரணம்
நம்புறு பானுபோற்ற வொளியாதி நல்கு
நறுநாவன் மூல சரணம். (கூரு)

சந்திரன் வாழ்த்தி மாமன் றருசாப மாற
சரண்புக்க சரண சரணம்

சுந்தர நாகமேவு மயன்செய்வி மானத்
தொடர் புற்ற வாதி சரணம்
வந்தர நாதமோடு பணிவீட ணற்கு
வரநல்கு மமுத சரணம்
முந்தர ஞரிநேமி சமனுக கும்ப
முநிபரவு மொருவ சரணம் (கூசு)

பரவியி ராவணேசன் றனைவீட்டி ராமன்
பழிநீக்கு மிறைவ சரணம்
விரவியு லூதைவாயி னுறுதந்தி னுற்று
வியன்கோயின் மேய சரணம்
திரவிய மின்றிநீற்றி னெயில்கட்டு வித்த
சித்தப்பிர சித்த சரணம்
உரவிய தீர்த்தவைப்பென் றுயர் தீர்த்த முற்று
மொளிர்தீர்த்த மேனி சரணம். (கூஎ)

திருமலர் வாசனுற்றுற் சவங்கொண் டுவந்த
சிவஞான தான சரணம்
மருவுப ராசரன்றன் வழிபாடு கண்டு
வஃகீந்த வரத சரணம்
நிருதிப ராவிபச்சாத் தாபேச னென்ன
நிறுவித்த வெந்தை சரணம்
வருமொரு வீட.ணன்வற் சரந்தோ றிறைஞ்ச
வளர்தோய நாத சரணம். (கூஅ)

வடதிசை மன்னவன்புட் பகநாடி யேத்த
வரமீந்த நித்த சரணம்
படருபு நந்திகேட்ப நகர்மேன்மை முற்றும்
பகருநந் தீச சரணம்

4A
3-83

திடமுறு மாதிசைவ மறையோர் செருக்கைச்
சிதைவித்த வார்த்த சரணம்
விடலரு மூர்த்திதீர்த்தந் தலமூன்று மோங்கு
வியன்ஞான வைப்ப சரணம். (கசகூ)

சரதம தாகபாகி ரதிநோற்றி வர்ந்த
தழைசடா டவிய சரணம்
விரதர்கண் மூழ்குமொன்பான் றடம்வாய்ந் திலங்கு
விரிநீர்த் தலத்த சரணம்
வரத்வ னீடுசென்னி யதுகீண் டுயர்ந்த
வளநாவ லேச சரணம்
பரவுறு மெளியனேற்கிங் கருண்மாரி தூற்றும்
பசியகா ரணைய சரணம். (க00)

---

திருவானைக்காப் பதிற்றுப்பத்தந்தாதி.

முற்றிற்று.

0— 12 MSU
1932

GA / 2-71